மெய்



பாலகுமார்

மெய்

பாலகுமார்

மெய்

பாலகுமார்

அலாரம்பு

ஆவாரம்பூ வெளியீடு 14

மெய்; கவிதைகள்; பாலகுமார்; முதற் பதிப்பு: நவம்பர் - 2025; ஆவாரம்பூ வெளியீடு, தளம் எண். 49, புதிய நேரு நகர், தியாகராஜ நகர், திருநெல்வேலி-627 011; அட்டை வடிவமைப்பு: காசி கணினி கலையகம், பாளையங்கோட்டை; பக்கங்கள்-38; விலை:ரூ.50; அலைபேசி - 9600501847 மின்னஞ்சல்: aavaarampoopublications @gmail.com.

சமர்ப்பணம்

என் வாழ்வில் துணை நிற்கும்

தெய்வத்திரு. ராமகிருஷ்ணன் - மணிப்ரியா
கான சரஸ்வதி - முருகன்
ராச மாணிக்கம் - சர்மிளா
அமிர்த கௌரி - முத்துக்குமார்
மீனாட்சி - சண்முகவேல்

ஆகியோருக்கு இந்நூல்...

பாயிரம்

என் வாழ்வில் நடந்த சில துயரங்களுக்கு பிறரை குறை சொல்வதை விட்டு நானே காரணம் என்று ஏற்றுக் கொண்டேன். அதன் தொடர்ச்சியாக சில புரிதல்கள் மனதிற்கு அப்பால் உண்டானது. அந்த உணர்வில் தோன்றிய கவிதைகளை ஒரு புத்தகமாக வெளியிட்டு உள்ளேன்.

எனது முந்தைய கவிதைத் தொகுப்புகளான 'தவமெனும் கனலி' மற்றும் 'வற்றாயிருப்பு' நூல்களை வெளியிட்ட ஆவாரம்பூ பதிப்பகத்தாரே இந்நூலினையும் வெளியிடுகிறார்கள். அவர்களுக்கு எனது நன்றியை காணிக்கை ஆக்குகிறேன்.

இன்றும் மக்களுக்கு நேரடியாகவும் மறைவாகவும் உதவியும் ஆசியும் வழங்கி வரும் சித்தர்களையும் பெரியோர்களையும் வணங்கிப் போற்றுகிறேன். எனது உறவினர்கள், நண்பர்கள் சுற்றத்தார் அனைவருக்கும் நன்றி.

வாழ்க வளமுடன்.

28-10-2025

எம்.வி.பாலகுமார்
mvbkumaar@gmail.com
9489815991

29 கவிதைகள்

♦ பாலதிரிபுரசுந்தரி 09; பக்தி – முக்தி 10; மௌனம் 11; நான் யார்? 12; பாய்மப் பொருள் 13; தவ ஆற்றல் 14; உயிரும் மனமும் 15; பொருள் பெருகுக 16; மெய் 17; திருக்கார்த்திகை 18; சரஸ்வதி பூஜை மற்றும் விஜய தசமி வாழ்த்துகள் 19; நமசிவாய 20; உறு பொருள் 21; இக்கணத்தில் வாழ்ந்து விடு 22; முறை வணக்கம் 23; அன்பும் மலரும் 24; உணர்வின் வழி 25; அனுபவம் கொள் 26; பைரவர் 27; ஏகாந்தம் 28; ஈசன் 29, இறை வசம் 30; சரணாகதி 31; சித்தர் வாழ்கவே 32; துரியம் 33; நிர்மல் (தூய்மை) 34; ஏகவெளி 35; சஞ்சிதம் 36; எண்ணம் 37.

பாலதிரிபுர சுந்தரி

உயிரை உணர்ந்தபடி
உணர்வில் கரைதல் – உனக்கு
இயல்படி பெண்ணே!
உலகில் வாழும்படி
என்னை தந்ததேன் – உனக்கு
கலகமடி பெண்ணே!
கருவில் கரைந்தபடி
வாழ்ந்தோர் வழி – கணக்கு
உண்மையடி பெண்ணே!
சித்தம் சிவமாகும்
சித்தர் அவர் – உன்னை
வணங்கும்படி பெண்ணே!
உணர்வில் உள்ளபடி
வணங்கிடுவேன் – உன்னை
நானுமடி பெண்ணே!

◆

பக்தி – முக்தி

எல்லையில்
கொடுப்பதும் உண்டு,
பெறுவதும் உண்டு,
தில்லையில்
கொடுப்பதும் இல்லை,
பெறுவதும் இல்லை,
உணர்வில்
முதல் நிலை பக்தியாம்!
கடை நிலை முக்தியாம்!

◆

மௌனம்

மெய் ஞானத்திற்கு
குரு பக்தியும்,
குரு பக்திக்கு
உயர் ஞானமும்,
இசைவில் முக்திக்கு
வழி ஆச்சு,
மற்றவை தித்திக்கும்
வீண் பேச்சு!

◆

நான் யார் ?

வீணே அலைந்து
விடை தேடுவானேன் ?
தானே 'அது'வாகி
கடை சேர்வதற்கு,
தன்னை அறிதலே
தலையாய வழி !

◆

பாய்மப் பொருள்

உடலில் ஒட்டாத நதி
ஒன்று வளைந்து ஓடுது,
எவர்க்கும் எட்டாத செய்தி
தனியே வந்து தருமது,
உலகில் ஒட்டாது நிற்கும்
எவரையும் தேடி வருகுது,
உணர்வில் தட்டாது வாழும்
நிலை இறைவன் தருவதிது.

.◆

தவ ஆற்றல்

வானே பொழியும் பெரும்
மழையும்
தானே பாயும் காட்டாறும் –
ஒருசேரக்
கூடும் அணைநீர் போல –
தன்னுள்
தானே பொழியும் பெரும்
ஆற்றலதைக்
காணக் கழியும் வினையாவும் –
கரைசேரக்
கூடும் எனக் காத்திருப்பேன் –
என்னுள்
காணக் காண நிதமும்
அற்புதம்!

.◆

உயிரும் மனமும்

கடலும் அலையும் போலவே
உயிரும் மனமும்,
அலை காணாத ஆழத்தில்
கலந்து விடவே,
தாளாத துன்பமும் எனக்கு
காணாத பேரின்பமே!

◆

பொருள் பெருகுக

அருளுணர்வை அளக்கலாகுமோ!
பொருளுணர்வைத் துறக்கலாகுமோ!
இவ்விருவுணர்வும் இயல்பாகுமே
இறையுணர்வில் நின்றவர்க்கு.

◆

மெய்

அகவுணர்வில் வந்த சொல்
அருளே தந்ததாகும் – உன்
புறவுலகைக் கடந்து நில்
அருளே வாழ்வுமாகும் – பின்
ஐயமில்லை அகத்தே வாழ்
அருளே மெய்யுமாகும்.

◆

திருக்கார்த்திகை

இன்றும் விளக்கேற்றும் படிக்கு
செய்த விளக்கம் என்ன?
அருளும் தலைக்கேற்றும் படிக்கு
செய்த விவரம் என்ன?
பொருளில் புவிசேர்ந்து வாழும்
மனிதன் சிறந்து விளங்கவே,
அருளில் புலன்கடந்து வாழும்
இறையில் கரைந்து விடவே,
முறையாம் சிறுஜோதி ஏற்றி
பரமாம் அருட்பெரும்ஜோதி
காணுவோம்.

◆

சரஸ்வதி பூஜை மற்றும் விஜய தசமி வாழ்த்துகள்

உள்நோக்கிய பயணத்தில்
உலகை உணர்ந்து படி,
அகநோக்கிய பயணத்தில்
அருளை அளந்து படி,
பொருள் சேர்
வாழ்வை பொலிவாக்கும்,
அருள் சேர்
வாழ்வை அழகாக்கும்,
இருள் சேர்
இருவினை இயங்காதாம்,
இறை சேர்
வாழ்வு இல்லபானவர்க்கே.

◆

“நமசிவாய”

புற ஏடெடுத்து பார்க்கினும்
எட்டாத நாதனாம் சிவன்,
அக வீடெடுத்து பார்ப்போர்க்கு
அறிகின்ற யோகமாம் அவன்,
அவன்தாள் எடுத்து தலை
வணங்குகின்றேன் நான்.

◆

உறு பொருள்

எங்கும் நின்றாடும்
இறையே
உனைக் கண்டாவது
முறையே !

◆

இக்கணத்தில் வாழ்ந்து விடு

எக்கணமும் வாழும்
முழுமுதற் பொருளே
இக்கணத்தில் நான்
வாழ விரும்புகிறேன்,
இக்கணத்தில் வாழ்வதில்
நிலையான அர்த்தமுண்டு,
உணர்வுகள் வாழ்வு
பெறுவது இக்கணமே,
நடந்ததென்றேன் இனி
நடக்குமென்றேன் இங்கே
நிகழ்காலத்தில் இறை
நியதி மறந்தேன்,
தொடக்கம் நீயே
முடிவும் நீயே
இக்கணத்தில் வாழும்
உணர்வும் நீயே,
தடையும் இல்லை
பிரிவும் இல்லை
இக்கணத்தில் எனை
இணைத்துக் கொள்கிறேன்,
கறையும் இல்லை
குறையும் இல்லை
இக்கணம் வாழும்
இறையே பெரியஎல்லை.

◆

முறை வணக்கம்

புற ஜன்னல் விழி காணும்
புற தேசம் அது,
அகக் கண்ணின் வழி அறியும்
பர தேசம் எது?
நம் எண்ணம் முறை வகுத்த
அவர் பெரிய குரு,
தன் உள்ளம் வழி சென்று
அதை உணர்ந்து படி,
எவர்க்கும் உண்மை முறை அது
உலகப் பொது மறை,
பிறர்க்கு தந்த படி வாழ்ந்த
வள்ளுவர் வாழ்க! வாழ்க!

◆

அன்பும் மலரும்

உள்ளபடி உள்ளுணர்வாம்
உள்ளேபடி,
உள்ளமெல்லாம் இறைவன்
இயக்கமடி,
அண்டமெல்லாம் அவனில்
அடக்கமடி,
அகத்துணர்வில் அறிவாய்
நீயும்படி,
அறிவுணர்ந்தோர் சொன்ன
கூற்றுப்படி,
கற்றுணர்ந்தோர் வாழ்வர்
சொன்னபடி,
அறிந்திருந்தும் வாழவில்லை
நானுமடி,
குற்றமில்லை ஏற்றுக்கொண்டான்
இறைவனடி,
கேட்டிடவே சொன்னான்
சிரித்தபடி,
அவனே அன்பாம்
ஆதிசிவனடி!

◆

உணர்வின் வழி

செல்லும் வழி
வேறு ஆனாலும்
சேரும் இடம்
ஒன்றாகும்,
சொல்லும் மொழி
நூறு ஆனாலும்
தோன்றும் இடம்
உள்ளமாகும்,
உள்ளம் வழி
சென்றே நான்
உணர்வின் மொழி
புரிந்தேன் ஆம்!
நீளும் பெரும் மௌனத்தின்
சிறு ஓசை நான்!
வாழும் பெரும் ஒளியின்
சிறு துளி நான்!

◆

அனுபவம் கொள்

அனுமானத்தில் கேள்வி கேட்காதே!
அனுபவத்தில் கேள்வி கேள்
ஒரு வேளை
கேள்வி இல்லாமல் போகலாம்.

◆

பைரவர்

உலகாளும் இறைவன்
உணர்வது நிலையானது,
நிலையான உணர்வது
உள்ளத்தில் உணர்வானது,
நின்றாடும் உணர்வதை
கண்டாளும் மனதிற்கு
பிறப்புமில்லை, இறப்புமில்லை.

◆

ஏகாந்தம்

காந்தத்தில் கவனம் கொள்ளவே,
சாந்தத்தில் பயணம் ஆகும்!
பாந்தத்தில் மாற்றம் கொள்ளவே,
மாந்தத்தில் சுகமும் ஆகும்!
தாந்தத்தில் தன்இயல் கொள்ளவே,
யாந்தத்தில் கடவுளும் ஆகும்!

◆

ஈசன்

தொல்லை இல்லா மனதை
வளர்த்துக் கொள்ளவே,
எண்ணமில்லா நிலையும்
வளர்ந்து கொள்ளுமே,
எண்ணமில்லா நிலையில்
கரைந்து செல்லவே,
உள்ளமெல்லாம் ஈசன்
எல்லை இல்லை!
எல்லை இல்லை!
எல்லை இல்லையே!

◆

இறை வசம்

என்னை நான் கண்டறிய
உலகமெல்லாம் அவன் வசம்,
விண்ணை தான் துண்டறிய
பிரபஞ்சமெல்லாம் அவன் வசம்,
எண்ணம் நான் இடமறிய
எல்லையெல்லாம் அவன் வசம்,
எலலை தான் கடந்தறிய
இருந்திடுவேன் அவனே நிசம்!

◆

சரணாகதி

எதுவும் செய்ய முடியாது
என்று தெரிந்து கொள்ளவே
எல்லாம் செய்ய வேண்டி உள்ளது!

◆

சித்தர் வாழ்கவே

எண்ணமில்லா நிலையுமிங்கே
எட்டிப் பார்க்குதே,
உள்ளமெல்லாம் உயர்விளக்கம்
வழிந்து ஓடுதே,
எல்லையெங்கும்ஏகவெளி
காட்சி தோணுதே,
உள்ளமெங்கும் உயர்இறைவன்
சாட்சி ஆனதே,
காட்சி இங்கே சாட்சி அங்கே
கணக்கு புரியுதே,
காட்சி கண்டேன் சாட்சி ஆனேன்
கரைந்து போகவே,
மோகமெல்லாம் ஓர் நிலையில்
மாயம் ஆனதே,
காலமெல்லாம் கடை நிலையில்
கடந்து போனதே,
மாயமெல்லாம் மறைவெளியில்
மறைந்து போகவே,
காலம் கடந்துபரவெளியில்
கரைந்து போவேனே,
நானும் இங்கே வந்த கதை
வழக்கு தீர்ந்ததே,
காணுமிங்கே சொந்த கதை
சோகம் தீர்ந்ததே,
வாழுமிங்கோர் உயிர் என்னை
உணர்ந்து உயர்த்திடும்,
வாழ்ந்த பெரும் கோடி
குரு சித்தர் வாழ்கவே!

◆

துரியம்

சுத்த நிலை என்று பெரும்
அருளும் இருக்குதடா,
சக்தி நிலை என்று வரும்
பொருளும் இருக்குதடா,
பக்தி நிலை என்று பழம்
கணக்கு இருக்குதடா,
முக்தி நிலை முயன்று வரும்
யோகம் இருக்குதடா,
தந்த நிலை கடவுள் நிலை
கணக்கில் கொள்ளடா,
வந்த நிலை மறந்து வாழும்
மயக்கம் ஏனடா?
இந்த நிலை இறைவன் தந்தது
தயக்கம் ஏனடா?
சொந்த நிலை சொர்க்கம் என்றே
புரிந்து கொள்ளடா,
குற்றம இல்லை குறை இல்லை
துரியம் காணடா,
சொந்த வேலை கடவுள் வேலை
கருத்தில் கொள்ளடா,
வந்த வேலை முடியும் முன்னே
முயன்று பாரடா,
சக்தி நிலை கடவுள் நிலை
காட்சி காணடா,
இந்த நிலை இயல்பாய் போகும்
வாழும் மானிடா!

◆

நிர்மல் (தூய்மை)

உள்ளம் ஒன்று உண்டு – அங்கே
இறை உணர்வு கண்டு,
வாழ்ந்தோர் இங்கு உண்டு – அவர்
வந்த பாதை கண்டு,
வாழ்க நீயும் விண்டு – கணம்
உள்ளத் தூய்மை கொண்டு.

◆

ஏகவெளி

ஏகவெளி என்றோர்
வீடு இருக்குதடா,
ஏழுநிலை என்றார்
கடந்து பாரடா,
மோகஅலை கொண்டு
வாழ்ந்தேன் நானடா,
மோனநிலை கண்டு
வாழ்ந்தார் கோடியடா,
ஞானநிலை என்றோர்
தெளிவு காணடா,
ஏகநிலை கண்டோர்
வாக்கு உண்மையடா,
உள்ளபடி உணர்ந்து
கொண்டேன் நானடா,
ஏகவெளி ஏகநிலை
உண்மை தானடா.

◆

சஞ்சிதம்

பெற்றெடுத்த பின்னர்
பெரும் பாரம் இறங்குது,
பேறு காலம் பார்க்கும்
மனக் கவலை தீர்ந்தது,
பெற்றவர் தம் பாரம்
உச்சந் தலையில் இருக்குது,
முற்றுணர்ந்த முன்னோர்
பாஷை முட்டி நின்றது,
கற்றுணர்ந்த குருவின்
கலை தட்டி திறப்பது,
பெற்றுணர்ந்தேன் பெரிய
வாசல் கதவு திறக்குது,
பெரிய விஷயம் அருள்
அடையும் வழி பிறந்தது!

◆

எண்ணம்

உள் நிலை எவர்க்கும்
உதயமாகும்,
உணர்வு நிலை அதற்கு
உபயமாகும்,
சொல் செயல் இயல்பில்
வடிவமாகும்,
வடிவம் இங்கு வழக்கில்
பொருளுமாகும்,
எண்ணம் அலை தனக்குள்
அருளுமாகும்,
அருள் நிலை இறுதியில்
அவனுமாகும்,
அவன் பொருளே உடலில்
உயிருமாகும்,
உயிர் மையமே இங்கு
கருவுமாகும்,
கரு மையமே மறை
கடவுளாகும்,
மன அலையே அதன்
சாட்சியாகும்,
மனதிற்கப்பால் அவனும்
காட்சியாகும்.

◆

ஆவாரம்பூ வெளியீடுகள்

- காலத்தின் குரல் – தி.க.சி
  - தொ.ஆ; வே.முத்துக்குமார்
- ஒரு வயலினும் சில நினைவுக் குறிப்புகளும்
  - வே.முத்துக்குமார்
- நிழல் விடுத்து நிஜத்திற்கு
  - குள்ளக்காளிபாளையம் கே.பாலசுப்ரமணியம்
- தி.க.சி நாடகங்கள் - தொ.ஆ; வே.முத்துக்குமார்
- தி.க.சி திரைவிமர்சனங்கள்-தொ.ஆ;வே.முத்துக்குமார்
- தி.க.சி கவிதைகள் - தொ.ஆ; வே.முத்துக்குமார்
- தட்டச்சுக் கால கனவுகள் - இரா.நாறும்பூநாதன்
- ஒரு பாடல் ஒரு கதை - இரா.நாறும்பூநாதன்
- நியாசசுரம் - வே.முத்துக்குமார்
- பரணி வாசம் - இரா.நாறும்பூநாதன்
- தவமெனும் கனலி - பாலகுமார்
- வற்றாயிருப்பு - பாலகுமார்
- பொருநை முதல் நயாகரா வரை - இரா.நாறும்பூநாதன்

வானே பொழியும் பெரும்
மழையும்
தானே பாயும் காட்டாறும்
ஒருசேரக்
கூடும் அணைநீர் போல
தன்னுள்
தானே பொழியும் பெரும்
ஆற்றலதைக்
காணக் கழியும் வினையாவும்
கரைசேரக்
கூடும் எனக் காத்திருப்பேன்
என்னுள்
காணக் காண நிதமும்
அற்புதம்!

ஆவாரம்பூ

ரூ. 50/-